மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தூத்துக் குடியில் மீன்பிடி துறைமுகம கட்டுவதற்கான திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இப்பொழுது வேலைகளெல்லாம் துவக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எந்தெந்த வகையில் எப்படி யெல்லாம் நடைபெறுகின்றன என்ற விளக்கத்திற்குத் தனிக் கேள்வி போட்டால், விளக்கமாகப் பதில் தரப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, கொளச்சல் துறைமுகம் வேலை எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினார்கள். அது எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்? அதற் கான எஸ்டிமேட் தொகை என்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கொளச்ச லில் துறைமுகம், லீபுரம், முட்டம் ஆகிய இரண்டு இடங்களில் 'ஜெட்டி' என்று சொல்லப்படுகிற படகுகள் தங்கும் இடங்களை அமைப்பது குறித்து 1964-ம் ஆண்டில் ஹைட்ரோக்ராஃபிக் சர்வே செய்யப்பட்டது. 2.90 இலட்ச ரூபாய் செலவிட்டு அந்த ஹைட் ரோக்ராஃபிக் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. அதை அமைப்ப தற்கு எவ்வளவு தொகை வேண்டும், எந்த எந்த அளவுள்ள பெரிய கப்பல்கள், மீன்பிடி படகுகள் தேவைப்படுகின்றன, இன்னும் எந் தெந்த அளவுக்கு எவ்வளவு மீன் அங்கே கிடைக்கும் என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது அரசாங்கம் பரிசிலனை செய்துகொண் டிருக்கிறது. இந்தப் பரிசிலனை முடிந்த பிறகு நான்காவது ஐந் தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கு மானால் நிச்சயமாக இதனை ஏற்றுக்கொள்ள முடியும்.

நீர் ஊற்றுக்கள்

*** 490 வினா—திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தானாக பீரிடும் நீர் ஊற்றுக்கள் (ஆர்டீஷியன் கிணறுகள்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) தமிழகத்தில் வேறு எந்தெந்த இடங்களில் இந்நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

(உ) இந்நீர் பாசனத்திற்குப் பயன்படும் வகையில் வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) (1) தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், விருத்தா சலம், கடலூர் தாலுக்காக்களிலும்;

(2) திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் தாலுக்கா விலும்;

1970 மார்ச் 23]

(3) இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடி, ராஜ பாளையம் பகுதிகளிலும் நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(உ) பொதுவாகச் சொன்னால் விவசாயத் துறையினரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கிணறுகளைப் பயன்படுத்த மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே தோண்டப்பட்டு, நீரூற்றுக் குறைவினால் தடைப்பட்டிருக்கும் கிணறுகளைச் சுத்தம் செய்து உபயோகப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நீரூற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா? அவை நாற்றங்கால் விடுவதற்கு ஏற்றவாறு இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சிரமேல்குடி கிராமத்திலுள்ள திரு. ஆர். பாலகிருஷ்ண செட்டியார் என்பவருடைய நிலத்தில் செயற்கை ஊற்று நீர்க்கிணறு ஒன்றை அரசாங்கம் தோண்டியிருக்கிறது. திரு. பஞ்சநாத செட்டியார் என்பவருடைய நிலத்தில் பட்டுக்கோட்டை வட்டம் சிரமேல்குடி கிராமத்தில் ஒன்றும், ஒரத்தநாடு வட்டம், சேதுராயன்குடிகாடு கிராமத்தில் ஒன்றும் தோண்டப்பட்டிருக்கின்றன. பேராவூரணி வளர்ச்சி வட்டாரம், நாடியம் கிராமத்தில் திரு. இராமையா என்பவருடைய நிலத்தில் ஒரு கிணறும் தோண்டப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் ஓரளவு உப்புக் கரிக்கின்ற நீராக இருப்பதால், நாற்றங்காலுக்குப் பயன்படுத்த முடியாது என்றும், ஆனால், தென்னந்தோப்புக்குப் பாய்ச்சலாமா என்பதைக் குறித்து ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும், அது சாதகமாக இருந்தால், தென்னந்தோப்புக்கு பாய்ச்சப்படும். சில இடங்களில் பயிர்களுக்கும் பாசனம் செய்ய வசதிகள் இருக்கும் என்றும்தான் கூறப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் படுகையில் உம்பாரி நீரூற்றுக்கள் ஒரு சில இருக்கின்றன. அதனை ஒரு தனித் திட்டமாகக் கொண்டுவந்து, தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு ஆவன செய்ய முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதற்காக அரசாங்கம் இப்பொழுது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. அ. மாரிமுத்து: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாள் வட்டத்திலுள்ள அணைக்கரை படுகையில் இப்படிப்பட்ட ஊற்றுக் கிணறுகள் நிறுவப்பட்டு அவை யாருடைய பராமரிப்பில் இருந்து வருகின்றன என்பது தெரியாமலேயே அந்தத் தண்ணீர் வீண் விரயம் ஆகிக்கொண்டிருக்கிறது. அதை நல்ல முறையில் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் செய்ய இந்த அரசு ஏதாவது உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் யார் யாருக்குச் சொந்தமான நிலத்தில் இப்படிப்பட்ட கிணறுகள் தோண்டப்பட்டுத் தண்ணீர் விரயம் ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதுபற்றிய குறிப்புக்கள் தரப்பட்டால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தென்னூற்காடு மாவட்டத்தில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் வெட்டப்படுவதற்கு முன்பு பீரிட்டு வரும் நீரூற்றுக்கள் இருந்தன. நிலக்கரிச் சுரங்கங்கள் வெட்டியதற்குப் பிறகு அந்தப் பீரிட்டு வரும் நீரூற்றுகளிலிருந்து தண்ணீர் வரவில்லை . . .

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) மூல வினாவில் கேட்கப்பட்ட பொருளை விட்டு வேறு பொருள் குறித்து துணை வினா கேட்டது குறித்து.

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயின்ட் அஃப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில், குறிப்பிட்ட ஒரு ஜில்லா பற்றிய விவரங்கள் கோரப்பட்டிருந்தால், அந்த ஜில்லாவைப் பற்றித்தான் துணைக் கேள்வி போடவேண்டும் என்றுதான் பல முறை இந்த அவையில் தாங்கள் கூறியிருக்கிறீர்கள். மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் தென்னூற்காடு மாவட்டத்தை பற்றிச் சொல்லுகிறார்கள் .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கொஞ்சம் நுணுக்கமாகப் படிக்க வேண்டும்.

"தஞ்சை மாவட்டத்தில் தானாகப் பீரிடும் நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது உண்மையா?

தமிழகத்தில் வேறு எந்தெந்த இடங்களில் இந் நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன ?"

என்று மூலக் கேள்வி அமைந்திருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் விடை அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவையின் நிகழ்ச்சியைக் கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தென்னூற்காடு மாவட்டத்தில் மூன்று தாலுக்காக்களை அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், மற்ற நான்கு தாலுக்காக்கள் கல்தரையாக இருப்பதால், அங்கு நீரூற்றுக்கள் 'போர்' செய்ய முடியவில்லை. அதற்கு ஏதாவது பிரத்தியேக சலுகை தந்து, கற்களை உடைத்து நீரூற்றுக்களைக் கண்டுபிடிக்க ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?.